Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 70 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | டிசம்பர் 10, 2020

# 97 மேலதிக வாக்குகளால் பாதீடு நிறைவேற்றம்

## விக்கியும் கூட்டமைப்பும் நழுவல் முன்னணி எதிர்த்து வாக்களிப்பு

2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 99 வாக்கு வித்தியாசத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த 17 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. 03

## கடமையைப் பொறுப்பேற்றார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்



தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் இன்று தமது கடமையை ஆரம்பித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக சட்டத்தரணி நிமல் ஜீ.புங்சிஹேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்விற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்ரியவும் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரபாத் நியமனம்



இராணுவ தலைமை அதிகாரியாக டிசெம்பர் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், மேஜர் ஜெனரல் பிரபாத் தெமட்டன்பிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். 03

## அக்கரைப்பற்றில் 9 மாத சிசுவுக்கு கொரோனா

அக்கரைப்பற்றில் 9 மாத சிசுவொன்றும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளது. அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இந்த 9 மாத சிசுவும் 75 வயது வயோதிபரும் இனங்காணப்பட்டுள்ளனர். 03

## தரம் 6 மாணவர்கள் அனுமதி விண்ணப்பங்கள் ஒன்லைனில்

2020ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் 2021ஆம் ஆண்டில் 6ஆம் தரத்தில் மாணவர்களுக்கு பாடசாலைகளை வழங்கும் திட்டத்தை கல்வி அமைச்சு 03




## இறந்தவர்களுக்கு விளக்கேற்றக்கூட அனுமதி இல்லாத நாட்டில் மனித உரிமை எப்படி இருக்கும்?

போரில் இறந்தவர்களுக்கு விளக்கேற்றக்கூட அனுமதி இல்லை என்றால் இங்கு எவ்வாறான மனித உரிமை மீறல் நடந்திருக்கும் என்பதை, இலகுவாக கண்டறியலாம் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இடம்பெற்ற போராட்டத்தின் போது குறித்த விடயத்தினை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமையின் பிரதிபலிப்பு மரணங்கள், பாலியல் வன்முறைகள்,

## மக்களை மடையர்களாக்கவேண்டாம்



அபிவிருத்தியைத் தடுப்பது எனதோ அல்லது பிரதேச சபையினதோ நோக்கம் கிடையாது. மாறாக அபிவிருத்தியை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப ஒழுங்கு படுத்துவதே எமது நோக்கம்,

இந் நிலையில் மக்களை மடையர் ஆக்காதீர்கள். அரசியலுக்காக மலினப் படுத்தாதீர்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன் தவிசாளர் அபிவிருத்தியைத் தடுக்கின்றார் எனக் குற்றஞ்சாட்டி இன்று வியாழக்கிழமை (12) ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் அச்செழு அம்மன் வீதியைச் சேர்ந்த மக்கள் அழைத்துவரப்பட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அவ் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் பிரதேச சபை வாசலில் மறித்திருந்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களை தவிசாளர் தானகச் சென்று சந்தித்து நிலைமையை புரிய வைத்திருந்தார்.

இதன்போது அபிவிருத்தியை தடுப்பது எங்கள் யாருடைய நோக்கமும் அல்ல. எமது சபைக்குப் பகிரப்பட்ட அதிகாரம் ஒன்றை மத்திய அரசாங்கம் நிராகரிக்கின்ற நிலையில் அதனை சகித்துப்போக முடியாது.

அதிகாரப்பகிர்வினை நாங்கள் வலியுறுத்துகையில் மத்திய அரசாங்கம்



# காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம்





சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

எங்கள் மீதும் குண்டுகளைப் போட்டு கொன்று விடுங்கள் என்று உறவுகள் கதறி அழுதனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப் பாட்டம் இன்று முற்பகல் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் கோரோனா வைரஸ் நிலமையைக் கருதிற்கொண்டு குறைந்தளவான உறவுகளே ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிங்கமும் பங்கேற்றார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பில் சர்வதேசமும் ஐ.நாவும் நீதியை வழங்கவேண்டும் என்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தி னர்

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

தொழுநோய் பற்றி அறிந்திருக்க வேண்டியவை

தொழுநோய் பக்ரீரியாவினால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.

சிகிச்சை பெறாத நோயாளி ஒருவர் தும்மும்போதும் இருமும்போதும் பக்ரீரியா சூழலோடு சேர்கிறது. சுகதேகி ஒருவர் சுவாசிக்கும் போது சுவாசத்தினூடாக தொற்று ஏற்படுகிறது.

தோலில் ஏற்படும் வெளியேறிய இளம் சிவப்பு நிறமான தழும்புகள், அந்த தழும்புகளில் உணர்வு, நோ, தொடுகை குறைவடைதல், அத்தழும்புகளில் வியர்வை சுரக்காது, உரோமங்கள் காணப்படாது இருப்பின் தொழுநோய் அறிகுறியாக இருக்கலாம். எனவே தாமதிக்காது அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் செல்லுங்கள்.

உரிய சிகிச்சையை உரிய காலத்தில் பெறுவதன் மூலம் முற்றாக குணமாக்கலாம். நோயாளி ஒருவருக்கு உரிய சிகிச்சையை ஆரம்பித்த சில தினங்களில் அவரிடமிருந்து மற்றவருக்கு பரவாது.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**



## வீதியோர வெள்ளத்தில் வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்.துன்னாலை பகுதியில் வீதியில் தேங்கி நின்ற வெள்ளத்தில் தவறி விழுந்த குடும்பஸ்த்தர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் இன்று காலை இடம்பெற்றிருக்கின்றது.

துன்னாலையை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவகுமார் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் இன்று காலை வீட்டில் இருந்து வெளியே சென்று நீண்ட நேரமாக வீடு திரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி சென்ற போதே வீதியில் தேங்கி இருந்த வெள்ளத்தில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்துறை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டிருக்கின்றனர்

# மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசு பொறுப்புடன் செயற்படும்



மனித உரிமை, மக்களின் அடிப்படை உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதில் அரசு பொறுப்புடன் செயற்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் யாருடைய அடிப்படை உரிமையும் மீறப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்று (வியாழக்கிழமை) வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், தாம் ஆட்சிக்கு வந்த அனைத்து சந்தர்ப் பங்களிலும் மனித உரிமையை பாதுகாத்து, ஒழுக்கமான முறையில் இலங்கை மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க கட்டுப்பட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கையின் ஊடாக, அனைத்து மக்களதும் மனித உரிமைகளை பாதுகாத்து நாட்டினதும் குடிமக்களினதும் நற்பேறுக்காக அரசாங்கம் என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் பிரதமர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

கொவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் மனித சமூகத்தின் உரிமைகள் மீறப்படாத வகையில் அடிப்படை உரிமைகள் போன்றே தேவைகளுக்காகவும் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கியுள்ள கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு போன்றே, நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக உரிமைகளை வெற்றி கொண்டு, தேவையான கடமைகளை நிறைவேற்றுவதற்கு இம்முறை மனித உரிமைகள் தினத்தில் கைகோர்க்குமாறும் பிரதமர் அந்த அறிக்கையில் அழைப்பு விடுத்துள்ளார்.

## கான்ஸ்டபிள் கொலை

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பிரதி பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித் துள்ளார்.

இச்சம்பவம் அக்கரைப் பற்று - பாலமுனை பகுதியில் நேற்றிரவு (09) இடம்பெற்றது. 35 வயதான கான்ஸ்டபிள் ஒருவரே கொலை செய்யப்பட் டுள்ளதாக தெரிவித்துள்ளார்

குறித்த நபரின் உறவினர் ஒருவரே கொலை செய்துள் ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்..

## உரிமை கோரப்படாத உடல்களை உடனடியாக தகனம்செய்ய நடவடிக்கை

கொரோனா தொற்றினால் மரணித்து உறவினர்களால் உரிமை கோரப்படாத உடல்களை உடனடியாக தகனம்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் முன்வைத்த கோரிக்கையை ஆராய்ந்த சட்டமா அதிபர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 நோயினால் மரணித்து உறவினர்களால் பொறுப்பேற்கப் படாத சுமார் 19 சடலங்கள் நாட்டின் பல வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கையின் அரசியலமைப்பில் தனிமைப்படுத்தல் சட்டத் துக்கு அமைவாக, உரிமைக்கோரப் படாதுள்ள சடலங்களை தகனம் செய்ய முடியும் என, சட்ட மாதிபர் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# வலி.கிழக்கு பிரதேச சபைக்கு எதிராக போராட்டம்




வலி. கிழக்கு பிரதேச சபைக்கு எதிராக அச்செழுவைச் சேர்ந்த மக்கள் என அடையாளப்படுத்தி 28 பேர் அடங்கிய குழுவினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

“வலி.கிழக்கு பிரதேச சபையே சாதிய அடக்குமுறையினாலும் அரசியல் பழிவாங்கல்களினாலும் எமது கிராமத்தின் அபிவிருத்தியைத் தடுக்காதே” அச்செழு வாழ்மக்கள் என்று குறிப்பிட்ட பதாகையை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எந்த நின்றனர்.

“கட்சி அரசியலைக் காரணம்காட்டி மக்கள் அபிவிருத்திக்கு உலை வைக்காதே, வாக்களித்து பிரதேச சபைக்கு அனுப்பியது அபிவிருத்திக்காகவே, தடுப்பதற்கு இல்லை” உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் அவர்கள் கையில் ஏந்தியிருந்தனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உள்பட்ட அச்செழு அம்மன் கோவில் வீதியில் பிரதேச சபையின் தீர்மானமின்றி சட்டத்திற்கு புறம்பாக அடிக்கல் நட்டப்பட்டு காட்சிப் பதாகையும் அமைக்கப்பட்டிருந்தமை குறித்த காட்சிப் பதாகையினை தவிசாளர் அகற்றி இருந்தார். இதனால் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி அதிகார அலகுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விளம்பரப்பதாகை அகற்றப்பட்டமை தொடர்பில் தவிசாளர் நிரோஷ் பொது உடமைக்கு சேதம் விளைவித்தார் எனக் குற்றம்சாட்டி கடந்த திங்கட்கிழமை முதல் கைது செய்வதற்கு அச்சுவேலி பொலிஸார் தீவிரமாக முயன்றனர்.

எனினும் தவிசாளர் சார்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த எதிர்பார்க்கை பிணை விண்ணப்பத்தை அனுமதித்த நீதிமன்று நேற்று பிணை வழங்கியது.

இந்த நிலையில் இன்று அச்செழு வாழ் மக்கள் எனக் குறிப்பிட்டு 28 பேர் அடங்கிய குழுவினர் வலி.கிழக்கு பிரதேச சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# மனைவி பிள்ளையை கொன்ற வழக்கின் எதிரி இந்திய செல்ல முற்பட்ட நிலையில் கைது

மனைவி மற்றும் பிள்ளையை படுகொலை செய்தார் எனும் குற்றசாட்டு சுமத்தப்பட்டு திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள எதிரியே இந்தியா தப்பி செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு தப்பி செல்ல முற்பட்ட நபரையும் , அவரை அழைத்து சென்ற படகோட்டியையும் கடற்படையினர் கைது செய்து பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

தப்பி செல்ல முற்பட்ட நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் , குறித்த நபர் மனைவி மற்றும் பிள்ளையை படுகொலை செய்தார் எனும் குற்றச்சாட்டில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்ட நபரே இந்தியா தப்பி செல்ல முற்பட்டுளார். என பருத்தித்துறை பொலிசாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பில் இருந்து திருகோணமலையை சேர்ந்த துரைராசா இலட்சுமணன் எனும் நபர் பருத்தித்துறை இன்பசிட்டி பகுதியை சேர்ந்த புனேஸ்வரன் எனும் படகோட்டியின் உதவியுடன் இன்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை இந்தியாவுக்கு தப்பி செல்ல முயன்றுள்ளார்.

குறித்த இருவரும் சென்ற படகு சந்தேகத்திற்கு இடமாக இருந்தமையால் கடற்படையினர் வழிமறித்து சோதனை செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது திருகோணமலை நபர் இந்தியாவுக்கு தப்பி செல்வதை கண்டறிந்தனர்.

அதனை அடுத்து இருவரையும் கைது செய்த கடற்படையினர், மேலதிக விசாரணைகளுக்காக பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து இலங்கை , இந்திய பணத்தாள்களும் இரண்டு கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த படகோட்டி ஏற்கனவே கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் எனவும், இருவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

### கிறிஸ்துமஸ் தினங்களில் கொரோனா அச்சம்

# கட்டுப்படுத்த உதவுமாறு அரசு வேண்டுகோள்

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அதிகாரிகளுக்கு பொதுமக்கள் உதவ வேண்டும் என சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இனிவரும் விடுமுறை தினங்களில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பின்வேற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கிறிஸ்துமஸ் விடுமுறை தினங்களில் கடைகளுக்கு பொருட்கள் வாங்கச் செல்வதை மட்டுப்படுத்தல், பொருட்கள் வாங்குவதற்கு வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்லல்,

வீடுகளுக்கு அருகில் உள்ள, மிகக் குறைவான வாடிக்கையாளர்கள் வந்து செல்லும் கடைகளுக்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்தல், பெருமளவில் மக்கள் கூடும் வகையில், கேளிக்கை நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதைத் தவிர்த்தல் கிறிஸ்துமஸ் மற்றும் பண்டிகைக் காலங்களில் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவிக்கும் போது சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், வீட்டிலுள்ள வயோதிபர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வீடுகளுக்கு உறவினர், நண்பர்களின் வருகையை மட்டுப்படுத்தல், பொருட்கொள்வனவின் போது வரிசையில் நிற்பவர்களுக்கு இடையில் இடைவெளி இருப்பதை உறுதிப்படுத்தல், முடியுமானவரை ஒன்லைன் மூலமான கொள்வனவில் ஈடுபடல், வெளியிடங்களுக்கு சுற்றுலா செல்வதைத் தவிர்த்தல், வீட்டிலிருந்து வெளியில் செல்லும் சந்தர்ப்பங்களில் முகக்கவசங்களை அணிந்து கொள்வதுடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றல் என்பனவாகும்.

# கல்வித்துறை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கொரோனாவைத் தடையாகக் கொள்ள வேண்டாம்

கல்வித்துறை முன்னேற்றத்திற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கொரோனா நோய்த்தொற்றை தடையாகக் கொள்ள வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கல்வித்துறை அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மனிதவள அபிவிருத்தி என்பது அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். நாட்டின் எதிர்கால தலைமுறையினரை உற்பத்தித் திறன்மிக்க பிரஜைகளாக உருவாக்க அவர்கள் புதிய அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு தற்போதைய நிலைமைக்கு மத்தியில் இடையூறு ஏற்படக்கூடாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து இராஜாங்க அமைச்சுகளும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மீளாய்வு செய்யும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஒரு தேசியக் கல்விக் கொள்கையை விரைவாக உருவாக்குவதற்கு ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சர்வதேச தரத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும் குறிப்பிட்ட குறிக்கோளுடன் கூடிய தனிப் பாடத்திட்டத்தின் கீழ் முன்பள்ளி முதல் பட்டப்படிப்பு வரை கல்வி முறைகளை உருவாக்குவது மற்றொரு நோக்கமாகும் என தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது இலக்குகளை அடைந்துகொள்ள கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் கல்வி சீர்திருத்த, திறந்த பல்கலைக்கழகங்கள், தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அறநெறிப் பாடசாலைகள், பிக்கு கல்வி, பிரிவேனா மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள் இராஜாங்க அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள், கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகியன முன்னெடுத்துள்ள திட்டங்களை ஜனாதிபதி தனித்தனியாக ஆராய்ந்தார்.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பியல் நிஷாந்த, விஜித பேருகொட, சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராணுவ தலைமை...

இராணுவ தலைமை அதிகாரியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் குணவர்தன ஓய்வுபெறும் நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### 97 மேலதிக...

அதன்படி, இன்று மாலை வரவு செலவு திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

அதனடிப்படையில் வரவு செலவு திட்ட ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக 54 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தது.

வாக்கெடுப்பு ஆரம்பமாகவிருந்த போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சீ.சி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் வாக்கெடுப்பில் பங்கேற்காது சபையிலிருந்து வெளியேறியிருந்தனர்.

இதேவேளை தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் எதிராக வாக்களித்திருக்கின்றனர்.

### மக்களை...

அபிவிருத்தி ஒன்றை மேற்கொள்ள வேண்டுமாக இருப்பின் உரிய முறைப்படியான அனுமதிகளை பெறுமாறே வலியுறுத்துகின்றோம்.

அவ் அனுமதிக்கு முறைப்படியான கடிதம் கிடைக்கப்பெற்றால் உடன் சபையைக்கூட்டி அனுமதி தீர்மானிக்கப்படும். உரிய அனுமதிகள் பெறப்படின் அபிவிருத்தியை மேற்கொண்டு முன்னெடுக்க நாமும் ஒத்துழைப்போம்.

சாதாரணமாக நிர்வாக ரீதியில் முன்னெடுக்கபட வேண்டிய விடயங்களாக இவை இருந்தபோதும் பகிரப்பட்ட அதிகாரம் ஒன்றை அனுபவிப்பதற்கான மோதல்களே நடக்கின்றன. இவ் விடயத்தினை கிராமங்களில் சென்று பிழையாக அர்த்தப்படுத்தக்கூடாது.

மக்களின் அரசியல் அபிலாசைகளை சிதறடிப்பதற்காக சாதிய அடிப்படையிலான கருத்துக்களைக்கூறி மக்களை பிழையாக வழிநடத்த எத்தனிக்கின்றனர்.

உங்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை என்ற ரீதியிலும் அரச தாபனம் என்ற ரீதியிலும் எந்த விடயத்திலும் சாதிய ரீதியிலான சிந்தனைகள் எம்மிடம் கிடையாது. முற்போக்காகவே வலிகிழக்கு பிரதேச சபை சிந்திக்கின்றது. இந் நிலையில் இவ் ஆர்ப்பாட்ட ஏற்பாடு செய்த அரசியல்வாதிகளுக்கு சில விளக்கத்தினை நாம் கொடுக்கவேண்டியுள்ளது. அபிவிருத்தியை தவிசாளர் தடைசெய்கின்றார் என கிராமங்களில் சென்று மக்களை மடையர்கள் ஆக்காதீர்கள். அரசியலுக்காக எமது மக்களை மலினப்படுத்தாதீர்கள். எமது மக்கள் தியாகங்களுக்குச் செந்தக்காரர்கள். அவர்கள் மீது குடும்பக் கஸ்டத்தினை வைத்து மக்களை எவ்வாறும் கையாளலாம் எனக் கனவு கானாதீர்கள். மக்கள் ஆர்ப்பாட்டமாக வந்த பின்னர் எமது உண்மைகளைக் கண்டுகொண்டனர். மக்களை நாம் மதிக்கின்றோம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

### இறந்தவர்களுக்கு...

நிலங்கள் மற்றும் உரிமைகள் பறிப்பு என இங்கு வாழும் தமிழ ர்கள் கொன்று குவிக்கப்பட்ட இடமாக இலங்கை நாடு விளங்குகிறது .

போரில் இறந்தவர்களுக்கு விளக்கேற்றக்கூட அனுமதி இல்லை என்றால் இங்கு எவ்வாறான மனித உரிமை மீறல் நடந்திருக்கும் என்பதை இலகுவாக கண்டறியலாம்.

எனவே இலங்கை தீவின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை ஐக்கிய நாடுகள் சபை வழிகாட்டலில் நடத்தப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பின் வழி அனைத்துலக சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

என அவர்கள் குறிப்பிட்டனர்.

### அக்கரைப்பற்றில்...

இதனையடுத்து, கல்முனைப் பிராந்திய தொற்றுக்களின் எண்ணிக்கை 350ஆக உயர்ந்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

சிசு, சிகிச்சைக்காக கொழும்பு ஐடிஎச் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் சிசுவின் பெற்றொர்களுக்கு வைரஸ் தொற்றில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேனை, கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 500ஐத் தாண்டியுள்ளது.

### தரம் 6 மாணவர்கள்...

இணையம் ஊடாக ஆரம்பித்தது.

நாட்டில் முதன்முறையாக இணைய தொழில்நுட்பத்தின் மூலம் இந்தத் திட்டம் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் தலைமையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற பேறுபேற்றில் மாவட்ட வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் மாணவர்களுக்கு பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

டிசெம்பர் 24ஆம் திகதி வரை சிங்கள அல்லது தமிழ் மொழிமூலமாக இணையத்தின் ஊடாக தரவுகளை உள்ளிட அனைத்து அதிபர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த சேவை வசதியை கல்வி அமைச்சு இலவசமாக வழங்க மொபிடல் நிறுவனம் 7.5 மில்லியன் ரூபாய் நிதி அனுசரனையை வழங்குகின்றது.

# கொரோனா தடுப்பூசிகளை கர்ப்பிணிகள் எடுத்துக் கொள்ள வேண்டாம்!






தற்போதைய சூழலில் பைஸர் நிறுவன தடுப்பூசிகளை கர்ப்பிணிகள் எடுத்துக் கொள்ள வேண்டாம் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலகில் முதல் நாடாக பிரித்தானியாவில் நேற்று முதல் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றன.

90 வயதான மார்கரெட் கீனன் என்ற முதியவர் பிரித்தானியாவில் பைஸர் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றுக் கொண்டார்.

இதனை அடுத்து, முதியோர் இல்லங்களில் தங்கியிருப்போருக்கும், 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், என்.எச்.எஸ் ஊழியர்களுக்கும் முதற்கட்டமாக கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதனிடையே, பைஸர் நிறுவனத்தின் தடுப்பூசியை கர்ப்பிணிகள் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம் எனவும், அது தாயாருக்கு என்ன மாதிரியான பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லை என நிபுணர்கள் தரப்பு தெரிவித்துள்ளனர்.

இதனால், தற்போதைய சூழலில் பைஸர் நிறுவன தடுப்பூசிகளை கர்ப்பிணிகள் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்கின்றனர்.

மட்டுமின்றி, கர்ப்பிணிகள் கண்டிப்பாக தடுப்பூசி எடுத்துக் கொள்ள முன்வர வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், முதல் டோஸ் எடுத்துக் கொண்ட பெண்கள் அடுத்த மூன்று மாதங்களுக்கு தாயாகும் திட்டத்தையும் தள்ளிப்போட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, தாய்ப்பால் வழங்கும் தாயர்மார்கள், கண்டிப்பாக மருத்துவரின் ஆலோசனை பெற்ற பின்னரே தடுப்பூசி எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுபோலவே, 16 வயதுக்கும் கீழ் உள்ள சிறுவர்களுக்கும் பைஸர் நிறுவன தடுப்பூசி மறுக்கப்பட்டுள்ளது.

எனினும், கொரோனாவால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு கண்காணிக்க போதுமான ஆட்கள் கொண்ட சிறார்களுக்கும் பைஸர் நிறுவன தடுப்பூசியை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வாமை உள்ளவர்கள் தடுப்பூசியைப் பயன்படுத்துவதை தவிருங்கள்

கொரோனா தொற்றுக்கு எதிரான பிரித்தானியாவின் வெகுஜன தடுப்பூசித் திட்டத்தின் முதல் நாளில் பங்கேற்றவர்களில் இருவருக்கு ஒவ்வாமை பாதிப்பு இருப்பதை இங்கிலாந்தின் மருத்துவ ஒழுங்குமுறை நிறுவனம் கண்டறிந்துள்ளது.

குறித்த இருவருக்கும் நேற்று ஃபைசர் - பயோஎன்டெக் நிறுவனங்கள் இணைந்து தயாரித்த கொரோனா தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவர்களுக்கு தோல் கடி, மூச்சுத் திணறல் மற்றும் சில நேரங்களில் இரத்த அழுத்தம் ஆகியன ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஒவ்வாமை போன்ற எதிர்விளைவுகள் உள்ளவர்களுக்கு ஃபைசர் - பயோஎன்டெக் கொரோனா தடுப்பூசியை பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்படி, மருந்துகள், உணவு அல்லது தடுப்பூசிகளுக்கு ஒவ்வாமை காணப்படுபவர்களுக்கு இந்த அறிவுறுத்தல் பொருந்தும் என மருத்துவ ஒழுங்குமுறை நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இந்தியாவில் கொரோனா தடுப்பூசி உற்பத்தி: 64 பன்னாட்டுத் தூதுவர்கள் ஆய்வு!

ஹைதராபாத்திலுள்ள இரண்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் கொரோனா தடுப்பூசி உற்பத்தி குறித்து, 64 வெளிநாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் ஆய்வுசெய்துள்ளனர்.

பாரத் பயோ டெக் மற்றும் பயோ லொஜிக்கல் என்ற இரு நிறுவனங்களிலும் தடுப்பூசி தயாரிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் கேட்டறிந்துள்ளனர்.

இந்நிலையில், பல நாடுகள் தடுப்பூசிகளைத் தயாரித்து வந்தாலும், உலக மக்களுக்கு தேவைப்படும் அளவுக்கான தடுப்பூசிகளை இந்தியாவால் மட்டுமே உற்பத்திசெய்ய முடியும் என இந்தியாவுக்கான அவுஸ்ரேலிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் கொரோனா தடுப்பூசி விநியோகத்திற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில், கொரோனா தடுப்பூசி விநியோகத் திட்டத்தைக் கண்காணிக்க கோ-வின் எனும் புதிய செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தடுப்பூசி பெறுபவர்கள் 56 நாட்களுக்கு மது அருந்தக்கூடாது!



கொரோனா தடுப்பூசி போடுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பும், தடுப்பூசி போட்ட 42 நாட்கள் வரையிலும் மதுபானம் அருந்தக் கூடாது எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய பொதுசுகாதார கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் தலைவரான அனா போபோவா இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தடுப்பூசியான 'ஸ்புட்னிக்'கை மக்களுக்கு இந்த வாரம் செலுத்த ரஷ்ய அரசாங்கம் தயாராகியுள்ளது.

முதல்கட்டமாக, மருத்துவ ஊழியர்கள், சமூக பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தடுப்பு மருந்தை 21 நாட்கள் இடைவெளியில் இருதடவைகள் செலுத்த வேண்டும் என்பதால், 42 நாட்களுக்கு மது அருந்தக்கூடாது என ரஷ்யாவின் பிரதிப் பிரதமர் டாட்யானா, கோலிகோ கடந்த வாரம் கூறியிருந்தார்.

இந்நிலையில், தடுப்பூசி போடுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பும், முதலாவது தடுப்பூசி போட்டபின் 42 நாட்கள் வரையிலும் மதுபானம் அருந்தக்கூடாது என ரஷ்ய பொதுசுகாதார கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் தலைவரான அனா போபோவா தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி போட்டபிறகு உடம்பில் எதிர்ப்புசக்தி உருவாவதை மதுபானம் பாதிக்கும் என்பதால், குறிப்பிட்ட காலம் வரை மது அருந்துவதை தவிர்க்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## 100 நாட்களில் 100 மில்லியன் தடுப்பூசிகள்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை பெற்ற ஜோ பைடன் தனது முதல் 100 நாட்களில் 100 மில்லியன் கொரோனா தடுப்பூசிகள் எனும் இலக்கை நிர்ணயித்துள்ளார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் தமது திட்டம் தொடர்பில், இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா பாதிப்பு 30,000ஐ கடந்தது!

நாட்டில் நேற்றுமட்டும் 694 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் மொத்த கொரோனா பாதிப்பு 30ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதன்படி, இலங்கையில் இதுவரை 30 ஆயிரத்து 72 பேருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று தொற்று கண்டறியப்பட்டவர்களில் 651 பேர் பேலியகொட மீன் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய 43 பேரும் சிறைச்சாலைக் கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா மூன்றாம் அலையின் மொத்த பாதிப்பு 26ஆயிரத்து 516ஆகப் பதிவாகியுள்ளது.

## பண்டிகை காலங்களில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள்

பண்டிகை காலங்களில் பொது மக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், பண்டிகை காலங்களில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு அவற்றைப் பின்பற்றுமாறு சுகாதார பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

பண்டிகை காலங்களில் பயணத்தை குறைக்க பொதுமக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதி செய்யவும்.

அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும்.

பண்டிகை காலங்களில் குடும்பம் அல்லது நட்பு கூட்டங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டங்களை உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தவும்.

பண்டிகை காலத்திற்காக ஏனையவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் போது உடல் ரீதியான தொடர்பிலிருந்து விலகி இருக்கவும் அனைத்து நேரங்களிலும் சமூக தூரத்தை பராமரிக்கவும்.

வயதானவர்கள் வேகமாக நோய்த் தொற்றுக்கு ஆளாக நேரிடும் என்று கூறிய சுகாதார பணிப்பாளர், குடும்பங்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பெரியவர்களை பெரிய கூட்டத்திற்கு வெளிப்படுத்துவதைத் தவிர்க்கவும்.

இந்த காலகட்டத்தில் வெளிநபர்களின் வருகையை மட்டுப்படுத்தவும்.

தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக, பொது இடங்களில் சமூக தூரத்தை பராமரிக்கத் தவறும் நபர்களுக்கு அல்லது சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறும் நபர்களுக்கு சமூக இடைவெளியை பின்பற்றுமாறு வலியுறுத்த பொதுமக்களுக்கு உரிமை உண்டு.

பண்டிகை காலங்களில் பொருட்களை வாங்குவதற்கு கிடைக்கக்கூடிய ஒன்லைன் விநியோக சேவைகளைப் பயன்படுத்தவும்.

இந்த காலகட்டத்தில் வெளிச் செல்லும்போது முகக் கவசம் அணியவும். சமூக தூரத்தை பராமரிக்கவும். தொடர்ந்து கைகளை கழுவவும் அல்லது சுத்தப்படுத்தவும்.